UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
16-5-1986
PERIODICALS DIVISION

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 38 வைகாசி 2 றம்ழான் 6 இதழ் 94

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 16 5-1986

## இரகசியப் பொலிஸ் விசாரணையில் 'ஈழநாடு' பிரதிநிதிகள்

[யாழ்ப்பாணம்]

'ஈழநாடு' கொழும்பு பிரதிநிதிகள் இருவர் நேற்றுக் காலை இரகசியப் பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து 'ஈழநாடு' அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட 'இந்து' பத்திரிகை மற்றும் பத்திரிகைச்செய்தி நறுக்குகள் அடங்கிய பார்சல் சம்பந்தமாகவே இவ்விரு ஊழியர்களும் விசாரணைக் குட்படுத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவுகொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த 'பிள்ளையார் விலாஸ்' ஸ்தாபனத்துக்கு சொந்தமான பஸ்ஸில் இப்பார்சல் 'ஈழநாடு' கொழும்புஅலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

புதன் காலை பஸ் அனுராதபுரம் வந்ததும் அங்கு நடைபெற்ற சோதனையின்போது அப் பார்சலைக் கைப்பற்றிய ஆயுதப் படையினர் விசாரணை நடத்தினர். விசாரணையின் பின்னர் பஸ்ஸுடன் இருசாரதியையும் ஒரு பிரயாணியையும் தடுத்துவைத்துக்கொண்டு மற்றைய பிரயாணிகளை பஸ்ஸிலிருந்து இறக்கிவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள ஈழநாடு அலுவலகக் கிளையில் கடமையாற்றும் பெஞ்சமின் இராசரத்தினம், இ கந்தசாமி ஆகிய இரு பிரதிநிதிகளையும் இரகசியப் பொலிசார் விசாரணைக் குட்படுத்தியுள்ளனர். மேலும் 'பிள்ளையார் விலாஸ்' ஸ்தாபனத்தின் வெள்ளவத்தைக்

(8ம் பக்கம் பார்க்க)

# சந்நிதி ஆலய நிர்வாகிகள் ஜனாதிபதியை சந்திப்பர்

## பணிப்புரையைத் தொடர்ந்து அரச அதிபர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய நிர்வாகிகளை தம்மைச் சந்திக்குமாறு யாழ். அரச அதிபர் ஊடாக ஜனாதிபதி பணித்துள்ளார்.

சந்நிதி ஆலய அனர்த்தங்கள் பற்றிய அறிக்கையை அரச அதிபர் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தபோது ஜனாதிபதி இப்பணிப்புரையை வழங்கினார்.

தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோவிலில்இடம்பெற்ற அனர்த்தங்கள் பற்றிய ஆதாரபூர்வமான அறிக்கைக்கோவை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையுடன் சந்நிதி கோவிலில் இடம்பெற்ற அழிபாடுகள் பற்றிய 25 புகைப்படங்களும், எரிக்கப்பட்ட புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்டச் சிறப்பு மலரும் இணைக்கப்பட்டுள்ளன.

கடந்த 5ம் திகதி கொழும்பு சென்றிருந்த யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அடுத்தநாள் 6ம் திகதி ஜனாதிபதி, பாதுகாப்புஅமைச்சர், இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் ஆகியோரை ஒரே முகதாவில் சந்தித்து செல்வச்சந்நிதி கோவில் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பித்து, செல்வச்சந்நிதி கோவிலில் பூஜை, ஆராதனைகள் நடைபெற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றுவேண்டுகோள் விடுத்தார்.

அறிக்கையைப் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி,

[5ம் பக்கம் பார்க்க]

## 'புலிகள்' வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

பதுங்கு குழிகளை அமைத்துத் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நேற்று வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனின் பெயருடன் வெளியிடப்பட்டுள்ள இப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

[5ம் பக்கம் பார்க்க]

## பதற்றத்தில் காரைநகர்: சமூக மோதல் காரணம்

(காரைநகர்)

காரைநகரில் இரு சமூகத்தவரிடையே ஏற்பட்ட மோதலையடுத்து நேற்றுக் காரைநகர் பஸ் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது.

இம்மோதலையடுத்துக் கிணற்று நீரில் நஞ்சு கலக்கப்பட்டதைத் தொடர்ந்து அக் கிணற்றுநீரைப் பருகிய வர்கள ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

களபூமிப்பிள்ளையார் கோவிலடியில வைத்து இரு இளைஞர்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இம்மோதல் வெடிக்க ஆரம்பித்தது.

களபூமியைச் சேர்ந்த உயர் வகுப்பைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் சில தினங்களின் முன் ஊரிக்கிராமத்தைச் சேர்ந்த வேற்றுவகுப்பைச் சேர்ந்த பெண்ணை மணமுடித்ததைத் தொடர்ந்து ஆரம்பித்த பூசல் முடிவில் இப்பகுதியில் பெரும் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது.

இப்பதற்றம் நேற்று உச்சக் கட்டத்தை அடைந்ததினால் காரைநகருக்கு வெளியேயிருந்து வந்த பஸ்கள் யாவும் மூளாயுடன் சேவையை நிறுத்திக் கொண்டன.

வலந்தலையில் நேற்று ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது. இச்சம்பவங்களைக் கண்டித்து

[8ம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பு நடவடிக்கை: சுப்பிரமணியம் பூங்கா அழிக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னைய கட்டிடத்துக்கு முன்பாகவுள்ள சுப்பிரமணியம் பூங்கா அழிக்கப்படவுள்ளதாகவும் அத்துடன் திறந்தவெளி மண்டபமும் தகர்க்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது

பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு நடவடிக்கை காரணமாக யாழ் பொது சன நூல்நிலையக் கட்டிடம் தகர்க்கப்படவுள்ளதாக நேற்றைய 'ஈழநாடு' செய்திவெளியிட்டிருந்தது தெரிந்ததே. இதனுடன் சேர்த்து சுப்பிரமணிய பூங்காவும் திறந்த வெளியரங்குக் கட்டிடமும் அழிக்கப்படுமென்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. [ஐ]

## பங்களாதேஷில் பத்திரிகைகள் நேற்று வெளிவரவில்லை

(டாக்கா)

பங்களாதேஷில் நேற்று தினசரிப் பத்திரிகைகள் ஒன்றும் வெளிவரவில்லை. சுமார் பத்தாயிரம் பத்திரிகையாளர்களும் ஏனைய ஊழியர்களும் சம்பள உயர்வு கோரி 24 மணி நேர வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமையினாலேயே இந்நிலையேற்பட்டது.

பத்திரிகையாளர் சம்மேளனம் மேற் கொண்ட இந்த வேலை நிறுத்தநடவடிக்கையினால் அங்கு இயங்கி வந்த இரு பெரும் செய்தி ஸ்தாபனங்களும் முற்றாக ஸ்தம்பித்தன. [பி]

உ

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் அக்ஷய ஆண்டு வைகாசித் திங்கள் 5-ம் நாள் (19-05-86) திங்கட்கிழமை காலை 11-00 மணி தொடக்கம் 12-00 மணிவரை வரும் சுடகலக்கினம் கூடிய சுபவேளையில்,

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புதல்வன் | எமது புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| கருணாகரன் | கல்யாணி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

நல்லூர் சிவன் கோவிலில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தங்களும் தங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புரிமைதழுவி அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை விரும்பும்,

| | |
|---|---|
| திரு. திருமதி | திரு. திருமதி |
| க. வவுனதன், | N. தியாகராஜா, |
| (பிரதம இரசாயனவியலாளர்- | (இளைப்பாறிய |
| கந்தளாய்சீனித்தொழிலகம்), | இ போ ச. பிரதேச |
| 560 கே கே எஸ். வீதி, | முகாமையாளரும், |
| வண்ணார்பண்ணை, | காங்கேசன் ரவல்ஸ் |
| யாழ்ப்பாணம். | பொதுமுகாமையாளரும்), |
| | 126, அரசடிவீதி, கந்தர்மடம், |
| (C 2359) | யாழ்ப்பாணம். |

## காங்கேசன்துறை வந்த பெருந்தொகைப் படையினர்

### 'பிரபாகரனை ஒழிப்போம்' பிரசுரமும் விநியோகம்

[மாவிட்டபுரம்]

பலாலியிலிருந்து காங்கேசன் துறை நோக்கி நேற்று வந்த படையினரால் வீசிச்சென்றதாகக் கூறப்படும் பிரசுரம் ஒன்று மக்களைப் பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

நேற்றுக்காலை 7மணிக்குப் பலாலியிலிருந்து சுமார் 300இராணுவத்தினர் நடைபவனியாகக் காங்கேசன் துறை நோக்கி வந்தனர் வாகனங்கள் எதுவுமின்றி

(5ம் பக்கம் பார்க்க)

## ஜகார்த்தாவில் வெளிநாட்டுத் தூதரகங்கள் மீது தாக்குதல்

### சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்புபடை உரிமை கோருகிறது

[ஜகார்த்தா]

ஜகாத்தாவில் அமெரிக்க, கனேடிய, ஜப்பானியத் தூதுவராலயங்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்புப் படை உரிமை கோரியுள்ளது.

இப் படையின் அங்கத்தவர் எனப்படும் ஒருவர் இந்தோனேஷிய வெளி நாட்டமைச்சுக்கு அளித்த தொலை பேசித் தகவலில் அண்மையில் டோக்கியோவில் நடை பெற்ற ஏழு தொழிற்துறை வல்லரசுகளின 3 நாள் உச்சி மகா நாட்டின் போது சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக இயற்றப்பட்ட கண்டனத் தீர்மானத்துக்கு எதிராகவே தமது படை மேற்படி தாக்குதல் நடவடிக்

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளை திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ 250/- பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C 2295)

மல்லாகம் காங்கேசன்துறை வீதியில் திருஞானசம்பந்த வித்தியாசாலைக்கு முன்பாக உள்ள 5 பரப்பு வெற்றுக் காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. பரமசாமி, ஆஸ்பத்திரி ஒழுங்கை, இணுவில் மேற்கு, இணுவில். (C 2327)

நீர்வேலி கரந்தன் சந்திக் கண்மையில் சகல வசதிகளுடனும் புதிய வீடு விற்பனைக்குண்டு. விபரங்களிற்கு S பாலேந்திரா, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம் அல்லது 'செல்வபதி' சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி, உடன் தொடர்பு கொள்ளவும். [C 2351]

### தேவை

அனுபவம் உள்ள கொம்பசிற்றர், மெசின் மைன்டர் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். விவேகானந்தா அச்சகம்லிமிட்டெட், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். G2315

இதுவரை விபத்தில் சிக்காத Honda 200 மோட்டார் சைக்கிள் தேவை. 86 ஸ்ரீ தொடர் இலக்கத்துக்கு பின்னர் உள்ளதாக இருத்தல் வேண்டும். உரிமையாளர் மட்டும் மாலை 5-6 மணிக்கிடையில் தொடர்பு கொள்ளவும்: S R. சூரியன், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [C 2338]

எமது ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர்கள் (Salesmen) தேவை. 19-5-86 காலை 10-00 மணிக்கு நேரில் வரவும். ஞானம்ஸ் றேட்ஸ், மலிபன் பிஸ்க்கட் விநியோகஸ்த்தர்கள் 251, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். C-2349

### மணப்பந்தல்

வேளாள குல, கிறிஸ்தவ பெற்றோர் தங்கள் 28 வயதுடைய உதயச் செவ்வாய்க் குற்றமுடைய பிறநாட்டில் பணிபுரியும் மகனுக்கு படித்த அழகிய, நற்குணமுள்ள மணப்பெண் தேடுகிறார்கள். தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. c 2231, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-2331]

யாழ்ப்பாணம் பாரம்பரிய இந்து விவசாய உயர்குலப் பெற்றோர் பல்கலைக்கழகமொன்றில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் ஜாதகக் குற்றமற்ற தமது புத்திரனுக்கு 28 வயதிற்குட்பட்ட, க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்த, சொந்த வீடு-வளவினையுடைய தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றனர். ஜாதகத்துடனும் புகைப்படத்துடனும், விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: c 2319, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-2319]

### வகுப்புகள்

ரேடியோ and TV, வெல்டிங், வயறிங், மோட்டர் மெக்கனிசம். பிளம்பிங் (நீர்க்குழாய் பொருத்துதல்), தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகள் 17-05-86இல் ஆரம்பமாகின்றன. கட்டணம் மிகக்குறைவு. பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 2264)

முதலாவது
## பிறந்த தின வாழ்த்து

செல்வன்
### இ. நிஷேவிதன்

மட்டக்களப்பு கொத்துக்குளம் முத்துமாரியம்மன் கோவிலைச் சேர்ந்த இராமச்சந்திர ஐயர் - சவுந்தரம்மா தம்பதிகளின் புதல்வன் செல்வன் நிஷேவிதன் 16 - 05 - 86 (இன்று) தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, கட்டுவன் அப்பப்பா, அத்தைமார், உருத்திரபுரம்பெரியப்பா, பெரியம்மா, பிரசாந், பிரான்ஸ் சித்தப்பா, உடுப்பிட்டி அம்மப்பா, அம்மம்மா, சின்னம்மா, மாமாமார், மச்சான்மார், சித்தப்பா, குரும்பசிட்டி உறவினர் இறையருள்பெற்று பல்லாண்டு காலம் வாழவாழ்த்துகின்றனர். [C-1923]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் 2-ம் குறுக்குத் தெரு 219-ம் இலக்கத்தில் வசித்து காலஞ்சென்ற தம்பு தங்கவேலு என்பவரின் மரணசாதன சொத்துக்கள் விடயத்தில்

—காலஞ்சென்றவர்.

தங்கவேலு கைம்பெண் சிவமலர், 219, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

—மனுதார்.

வழ.இல. தத்துவம்/3956

மேலே இலக்கம்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986-ம் ஆண்டு ஆனி மாதம் 13-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 25-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைந்தது;
இ. மரியாம்பிள்ளை,
மனுதாரின்
சட்டத்தரணி. (C 2305)

ஷகி சலூன்
லேடீஸ் அன் ஜென்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி.

## இடமாற்றம் 10-5-86

உங்கள் பாதுகாப்புக்கருதி காங்கேசன்துறை வீதியில் இருக்கும் சிவன் கோவிலுக்கும் மனோகரா தியேட்டருக்கும் இடையில் இருக்கும் வெள்ளிவிலாஸ் ஹோட்டேலுக்கு முன்பாக உள்ள பலகடைகளில் ஒன்றில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். ஒவ்வொரு புதனும் பூட்டப்பட்டிருக்கும்.

C 2330 A. G. டாஸ்.

## நன்றிகூறல்

எனது வீட்டில் இருந்து கடந்த 8 மாதங்களாக இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட 6ஸ்ரீ3472 இலக்க மோட்டார் சைக்கிளை மீட்டுத்தந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
கனகசபை நடராசா.

C 2346

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி ★ பிரான்ஸ்
★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்

### பாஸ்போட், பொன்ட் (BOND), விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
தொடர்பு கொள்ளவும்:

### INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.

குறிப்பு:
ஜேர்மனி, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு முற்பணம், பாஸ்போட் இல்லாமல் உடன் தொடர்பு கொள்ளவும். (C 2311)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:

ஆங்கில
சுருக்கெழுத்தாளர்-II

அத்துடன், தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத் திட்டம்:
ரூபா. 880 ; 9 X 20: 5 X 25 - ரூபா. 1185/- (மாதமொன்றிற்கு)

தகைமைகள்:

1. ஆங்கிலம் உட்பட மூன்றுபாடங்களில் திறமைச்சித்தியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க. பொ. த.(சா.த) பரீட்சையில் ஆறு பாடங்கள்.
2. பின்வரும் ஆகக் குறைந்த வேகங்களுடன் ஆங்கிலச் சுருக்கெழுத்தில் தேர்ச்சி.

சுருக்கெழுத்து -ஒரு நிமிடத்திற்கு 80 சொற்கள்

தட்டெழுத்து - ஒருநிமிடத்திற்கு 35 சொற்கள்.

வயது:
40 வருடங்களுக்கு மேற்படாதவராய் இருத்தல் வேண்டும்.

அரசாங்க திணைக்கள, கூட்டுத்தாபன ஊழியர்கள் தங்கள் மேலதிகாரிகளுக்கு ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும், 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் திகதிக்குமுன்னர் இவ்வலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
08-05-1986. (A-663)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

## பொதுப் பட்டமளிப்பு- 1986.

டிப்ளோமாக்கள்/பட்டங்கள்/பட்டப்பின் டிப்ளோமாக்கள்/முதுமாணி/கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1986 ஆகஸ்ட் 30-ம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொதுபட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

1. கலாநிதித் தேர்வு.
2. முது தத்துவமாணித் தேர்வு
3. முது கலைமாணித் தேர்வு.
4. கல்விப் பட்டப்பின் டிப்ளோமா தேர்வு 1985.
5. விஞ்ஞானமாணித் தேர்வு 1985.
6. கலைமாணித் தேர்வு 1985.
7. வணிகமாணித் தேர்வு 1985.
8. விஞ்ஞானமாணித் (தொழில் நிர்வாகம்) தேர்வு 1985.
9. ஆயுர்வேத சத்திர சிகிச்சை டிப்ளோமாத் தேர்வு 1985.
10. சங்கீதம்/பரதநாட்டியம் டிப்ளோமாத் தேர்வு 1985.
[மேற் குறிப்பிட்ட தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் 7-07-86-க்கு முன்னதாக அனுப்பிவைக்கப் படல்வேண்டும் ]
11. மருத்துவமாணித் தேர்வு 1985. (விண்ணப்பங்கள் 21-07-86 க்கு முன்‌ ‌ தாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.)

வேண்டுகோள் படிவத்தின் 23x10 ச. மீட்டர் அளவுடைய சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை சிரேட்ட உதவிப் பதிவாளர்/தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுக் கிளைக் நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்குக் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.
12-07-1986. (A 669)

## அறிவித்தல்

### பட்டப்படிப்புகள் கல்லூரி நூலக நிதிக்காக நடத்தும் கலைவிழா

காலம்: 17-5-86 சனிக்கிழமை 10 மணிக்கு
இடம்: யா/வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம்

பட்டப்படிப்புகள் கல்லூரி தயாரித்தளிக்கும்
முருகையனின் "வெறியாட்டு" (நாடகம்)
நெறியாள்கை வீ. எம். குகராஜா
எஸ். சிவலிங்கராஜாவின் "உயிரினும் பெரிது கல்வி" [கவிதா நிகழ்வு]

கலாமதி கந்த மூர்த்தியின் "பரத நாட்டியம்"

பிரவேசம் ரூபா 10, 5.

ரிக்கற் கிடைக்குமிடம்:

### பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ரிக்கற்றுகளை கலைநிகழ்ச்சியன்று மண்டபவாயிலிலும் பெறலாம்.
C 2343


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் ரயில்வண்டி மீது விமான குண்டுவீச்சு: 72 பேர் பலி!

தெஹ்ரான், மே 15

**ஈரானின் பயணிகள் ரயில் வண்டியொன்று மீது ஈராக்கிய போர்விமானமொன்று நடத்திய குண்டு வீச்சில் 72 பேர் கொல்லப்பட்டனர். 300 க்குமதிகமானவர்கள் காயமடைந்தனர். இச் சம்பவம் நேற்று ஈரானின் குர்திஸ்தான் மாநிலத்தில் இடம்பெற்றது.**

உலகச் செய்திகள்

குர்திர்ஸ்தான் மாநிலத்தின் அவாஸ் நகரிலிருந்து தெஹரான் நோக்கி வரவிருந்த ரயில் வண்டியே குண்டுவீச்சுக்கிலக்கானது. இந்த வண்டியின்மென்று நான்கு பெட்டிகள் சேதமடைந்தன,

இந்த ரயில் பாதை வழியாகவே ஈரான் - ஈராக் யுத்த எல்லைப்பகுதிகளுக்கு ஈரானிய துருப்புகள் ரயில் வண்டிகளில் அனுப்பி வைக்கப்படுவதுண்டு எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆகையினுலேயே இந்த ரயில் பாதையைச் சேதமாக்கும் நோக்குடன் ஈராக் குண்டு வீச்சை நடத்தியிருக்கலாமென்று அறியப்படுகின்றது.

அவாஸ் நகர ரயில் நிலையத்தில் தரித்து நின்ற போதே மேற்படி ரயில் வண்டி தாக்கப்பட்டது. இது தாக்கப்பட்ட போது இதில் பயணிகள் நிறைந்திருக்கக் காணப்பட்டனர் எனவும் கூறப்பட்டது.

போபால் விஷவாயு நஷ்டஈடு:

## அமெரிக்காவில் இந்திய தீர்ப்பு அமுலாகும் சாத்தியம்!

### ராஜ்யசபாவில் தகவல்

புதுடில்லி, மே 15.

போபால் 'யூனியன் கார்பைட்' விஷவாயுக் கசிவு நஷ்டஈட்டு வழக்கின் இந்திய நீதிமன்றத்தீர்ப்பை அமெரிக்காவில் அமுல்படுத்தும் சாத்தியம் காணப்படுவதாக இந்திய ராஜ்ய சபா தெரிவித்துள்ளது.

ராஜ்ய சபாவில் இந்திய தொழில்துறை இணை அமைச்சர் திரு. அருணுசலம் இது பற்றிக் கூறுகையில், யூனியன் கார்பைட் தொழிற்சாலை சொத்துக்கள் அமெரிக்காவில் உள்ளன. எனவே அங்கு நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொள்வது சாத்தியமானது என்று தெரிவித்தார்.

அமெரிக்க நீதிமன்றமொன்று போபால் சம்பவம் தொடர்பான இந்திய நீதிமன்றத் தீர்ப்பை, அமெரிக்காவில் ஒரு சில நிபந்தனைகளுடன் அமுல்படுத்த முடியுமென்று தெரிவித்திருந்தது. இதனையடுத்தே இந்திய ராஜ்ய சபா மேற்கண்டவாறு தெரிவித்தது. [கி]

## பஞ்சாபிலிருந்து இந்துக்கள் வெளியேற்றம்

அமிர்தசரஸ், மே 15,

பஞ்சாப்மாநிலத்தில் இந்து சமூகத்தவர்கள் மீதான கெடுபிடிகளையடுத்து இம்மாநிலத்திலிருந்தும் இந்துக் குடும்பங்கள் அயல் மாநிலமான ஹரியாணு நோக்கி நகர ஆரம்பித்துள்ளனர்.

இதுவரை 50 க்கு மேற்பட்ட இந்துக் குடும்பங்கள் தமது உடமைகள் மற்றும் சொத்துக்களை விற்ற பின்னர் பஞ்சாபிலிருந்தும்வெளியேறியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த வாரத்திலும் சுமார் 20 இந்துக்கள் பஞ்சாப் மாநிலத்தில் சுட்டுக்கொல்லப் பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பஞ்சாப் முதலமைச்சர் திரு பர்னுலா இந்துக்களின் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு முயற்சி செய்துவருகிருர் அவர் இதற்கென ஒரு குழுவை அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. [கி]

சோவியத் அணு ஆலை விபத்து:

## கோபச்சேவ் முதல் தடவையாக கருத்து வெளியீடு

மாஸ்கோ, மே 15,

சோவியத்சேர் நோபில் அணுமின் ஆலை விபத்துக் குறித்து சோவியத்அதிபர்திரு. மிக்கேல் கோபச்சேவ் நேற்று முதல் தடவையாக தமது கருத்தை வெளியிட்டார்.

அவர் அவ்விபத்துப் பற்றிக் கூறியதாவது: "இருவர் விபத்து நடந்த மறுகணமே ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். 9 பேர் பின்னர் அணுசக்தி கதிரியக்கத்தினுல் கொல்லப்பட்டனர் 300 பேர் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

"எதிர் காலத்தில் இது போன்றவிபத்துக்களும் இதைவிட மோசமான அணுசக்தி விபத்துக்களும் நேரக்கூடிய சூழ்நிலைகள் உலகம் முழுவதிலும் காணப்படுகின்றன. எனவே அணுசக்தி வளம் கொண்டநாடுகள் இவற்றைத் தவிர்க்கும் வகையில் சர்வதேச ரீதியில் கூட்டு ஒத்துழைப்பினைக் கொண்டிருக்கவேண்டும்.

"ஜப்பானில் அணுகுண்டு போடப்பட்ட 40- வது ஆண்டு பூர்த்தியுடன் ஆரம்பமான சோவியத் யூனியனின் அணுசக்தி பரிசோதனை நிறுத்தம் இந்த ஆண்டிலும் அந்தஅணுக் குண்டு வீச்சின் 41வது வருட பூர்த்தியான ஆகஸ்ட் 6ந் திகதி வரை நீடிக்கும்" என்றுகோபச்சேவ் தெரிவித்தார்.

அணுசக்தி பரிசோதனைகளை முற்ருக நிறுத்தும் வகையில் அமெரிக்காவுடன் ஐரோப்பாவில் அல்லது உலகில் வேறெங்காவது பேச்சுநடத்தத் தாம் தயாராகஉள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.


உங்களின் இழந்த சக்தியை மீண்டும் பெற
டாக்டர்கள் சிபார்சு செய்வது
உயிர்ச்சத்து நிறைந்த




றேயல்
குளுக்கோஸ் டீ
குளுக்கோஸ் என்று
கேட்காமல
றேயல்
குளுக்கோஸ் டீ
என்று
கேட்டு வாங்குங்கள்.

தாய்மார்களே!
உங்கள்
பள்ளிச்செல்வங்களின்
ஆடைகள் பளபளக்கும்
வெண்மையில்
ஜொலிக்க வேண்டுமா?
இன்றே
வாங்கிப்பாவியுங்கள்:




தரத்தில் சிறந்த
றேயல் நீலம்

பைக்கட்டுக்களில் அடைத்து சந்தைப்படுத்துபவர்கள்:

தலைமை அலுவலகம்,
றேயல் இன்டஸ்றீஸ்,
22-1/1, ஆதமல்லி பில்டிங்,
ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு 13.
தொலைபேசி இலக்கம்: 26679

கிளை ஸ்தாபனம்:
றேயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண். வட-மேற்கு, ஆனைக்கோட்டை.
[A 487]



இப்பொழுது
தாராளமாகக்
கிடைக்கிறது

LANKA CEMENT

லங்கா சீமெண்ட்



விலை ரூபா 96/- மாத்திரமே.
(50 கி.கி/ தொழிற்சாலையிலிருந்து)
1978ன் B.S.S.12 தரத்திற்கமைந்தது.

உரமும் உறுதியும் நாடுவோர் தேடி வாங்குவது - லங்கா சிமெண்ட்

லங்கா சீமெந்து லிமிட்டெட்
கேமலை வீதி, காங்கேசன்துறை

Phoenix

(A492)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

தைரியவான் எவ்வளவு இழிவு வந்தாலும் தன் நிலையில் மாறுவதில்லை. தீப்பந்தத்தைத் தலைகீழாகப் பிடித்தாலும் அது மேல் நோக்கியே எரியும்.

— பர்த்ருஹரி நீதி

## நமதுநோக்கு

# மேலவையைக் கலைக்க எம்.ஜி. ஆர். ஏன் விரும்புகிறார்!

தமிழ்நாட்டில் மேல் சபையைக் கலைத்துவிடுவதற்கு கீழ்சபையான சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்தீர்மானம் இந்தியப் பாராளுமன்றத்திலும்நிறைவேற்றப்பட்டதின் பின்னரே செயல்படுத்தப்படும். அதுவரையில் மேலவையின் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முன்னர் நடைமுறையில்இருந்து பின் கலைக்கப்பட்ட செனட்சபை போன்றதே தமிழ்நாட்டில் மேலவை. சட்டப்பேரவையில் பிரதிநிதித்துவம் பெற முடியாதவர்களுக்கு ஒரு வாய்ப்பாக மட்டுமின்றி, முக்கியமான விடயங்களில் அரசுக்கு ஆலோசனைகள் வழங்கக்கூடிய அறிஞர்கள், அனுபவசாலிகள், கலைஞர்கள் போன்றவர்களுக்கும் வாய்ப்பளிப்பதாக இந்த மேலவை இருந்து வந்துள்ளது.

குறிப்பாக, அரசாங்கம் அவசரப்பட்டு உணர்ச்சி வேகத்தில் நிறைவேற்ற முயலும்சட்டவாக்கங்களைத் தாமதப்படுத்தி சிந்தனைக்கு இடமளிக்கவும், நிதானமாகச் செயல்பட சந்தர்ப்பம் அளிக்கவும் மேலவை உதவி வந்துள்ளது.

சட்ட விதிகளின்படி செயல்படும் நீதிமன்றங்கள் அளிக்கும் தீர்ப்புகளில்கூட தவறுகள்ஏற்பட்டுவிடலாம் என்ற காரணத்தினாலேயே மேல் நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றங்கள், மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தச் சட்டங்களை ஆக்கித்தரும் அமைப்புக்களான சட்ட சபைகளும் சிலசமயம் தவறிவிடக்கூடும் அல்லவா? சட்ட சபைகளுக்கு மக்களால் தேர்ந்தெடுப்பட்டு வருபவர்கள் பெரும்பாலும் குறுகிய கட்சி நோக்கம் கொண்ட அரசியல்வாதிகள் தாம். இவர்கள் உருவாக்கும் சட்டங்களில் தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. இதனைத் தவிர்ப்பதில் மேலவை பெரிதும் உதவி புரிந்து வருகின்றது.

ஆனாலும் சிலசமயங்களில் மக்களுக்கும் நாட்டுக்கும் அவசரமாகத் தேவைப்படும் முக்கியமான சட்ட நடவடிக்கைகளை சட்டப் பேரவை அவசரமாக நிறைவேற்றும் சமயங்களில்கூட [illegible]மேலவை வீண் தாமதங்களை ஏற்படுத்தி சட்டத்தின் அவசரத் தன்மையைப் பாழடித்து விடுவதாக குற்றஞ் சாட்டப்படுவதுண்டு.

ஒரு கட்சி பதவியிலிருந்து பொதுத் தேர்தலின்போது தோற்றுவிட நேருமானால், அக்கட்சியின் ஆதரவில் மேலவைக்குத் தெரிவானவர்கள் தொடர்ந்தும் பதவியிலிருக்க முடிகின்றது. இவர்கள் புதிய அரசின் நடவடிக்கைகளை வேண்டுமென்றே தாமதிக்கச் செய்யவும், நிறைவேறாமல் செய்யவும் முடியும்.

ஐ. தே. கட்சியைத் தோற்கடித்து திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் கூட்டாட்சி ஏற்பட்ட சமயம் செனட் சபையில் இப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டு அரசின் செயற்பாடுகள் தாமதமுற்றன. செனட் சபையை ஒழிப்பதற்கு அவர்கள் சட்டமியற்ற நேர்ந்ததும்இந்த அடிப்படையிலேயே!

ஆனால் தமிழ்நாட்டில் அப்படியான ஒரு நிலை ஏற்படவில்லை. திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் தலைமையிலான அரசு இரண்டு தவணைகள் ஆட்சி பீடத்தில் அமரும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருந்தும் மேலவையைக் கலைக்கும் எண்ணம் இப்பொழுது ஏற்பட்டமைக்கு காரணம் புரியவில்லை.

இந்திய மாநிலங்களில் மிகப்பழமையான மேலவை தமிழ்நாட்டில்தான் உள்ளது. இச்சபையில் உறுப்பினராக இருந்தபடியே மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராகவும்பணிபுரிந்துள்ளார். இன்றைய முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும்முதன்முதல் மேலவை மூலமாகவே தீவிர அரசியலுக்கு வந்தார்.

அரசியல், பொருளாதாரம் மற்றும் கலை, கலாசாரத்துறைகளில் அனுபவமும் அறிவும் பெற்ற பலபெரியோர்கள் இச்சபையின் உறுப்பினர்களாயிருந்து தமிழ்நாட்டுக்குப் பெரும் பணியாற்றியுள்ளனர்.

தற்பொழுது பழம் அரசியல்வாதியும், தமிழ் அறிஞருமான ம. பொ. சிவஞானம் அவர்கள் மேலவையின் தலைவராக இருந்து பணியாற்றி வருகின்றார். திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் திரு. மு. கருணாநிதிஅவர்கள்இலங்கைத்தமிழர் பிரச்னை மீதுதமது சட்டப்பேரவை உறுப்பினர் பதவியைத்துறந்துவிட்டு மேலவையில் ஒரு உறுப்பினராக இருந்து வருகின்றார்.

சிலதினங்களுக்கு முன் மேலவை கலைக்கப்படுவது பற்றி மேற்குறித்த இரு தலைவர்களுமே உருக்கமான சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

திரு சிவஞானம் அவர்கள் இதுபற்றி மேலவையில் குறிப்பிடும்போது ''நான் தலைவராகவும் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் முதலமைச்சராகவும் பதவி வகிக்கும் காலத்தில்தான் இச்சபை கலைக்கப்பட்டது என்ற அவப்பெயர் ஏற்பட வேண்டாம்'' எனக் கேட்டுக்கொண்டார்.

திரு. கருணாநிதி பேசும்போது 'நான் இச்சபையில் இருக்கின்றேன் என்பதற்காகத்தான் இச்சபை கலைக்கப்படுகிறது என்றால் இச்சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளவும் தயாராய் இருக்கிறேன்'' எனக்குறிப்பிட்டார்.

எதுவாயினும்மேலவையை கலைப்பதற்கான பிரேரணை கீழ்ச்சபையில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இதனை எதிர்க்கட்சிகள் தி. மு. கழகமும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்த்துவாக்களித்துள்ளன. மார்க்ஸிய கம்யூனிஸ்கட்சி ஆதரித்துள்ளது. இந்திரா காங்கிரஸ் கட்சியும் காந்தி காமராஜ் காங்கிரஸ் கட்சியும் வாக்களிப்பின் போது இருக்கவில்லை.

இத்தீர்மானம் மத்திய பாராளுமன்றத்திற்குச் செல்லும்போது இந்திரா காங்கிரஸ் கட்சியின் நிலை எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது. தமிழ் நாட்டில் அண்ணா தி. மு. கழகத்தின் நட்பைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதற்காக தீர்மானத்தை மத்தியிலுள்ள அரசு ஆதரிக்கலாம் அல்லது நாட்டின் பொதுவான அரசியல் போக்கினால் இது ஏற்படுத்தக்கூடிய பின் விளைவுகளை உத்தேசித்திருப்பினும்[illegible] [illegible]

# 'உரும்பராய் இந்துவுக்கு 19-ம் திகதி பவளவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் இந்துக்கல்லூரியின் பவளவிழாவை முன்னிட்டு திருமுறை மாநாடு பொருட்காட்சி, மலர்வெளியீடு, பரிசளிப்புவிழா கலை நிகழ்ச்சிகள் என்பன நடாத்தப்படவுள்ளன

எதிர்வரும் 19-ம் திகதி திங்கட்கிழமை காலை கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் கல்லூரி அதிப திரு. செ. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள மாநாட்டுக்கு, யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினரானகக் கலந்து கொள்வார்.

உரும்பராய்கற்பகவிநாயகர் ஆலயத்திலிருந்து திருமுறைச் சுவடிகள் கூட்டுப்பிராத்தனையுடன் ஊர்வலமாகக் கல்லூரிக்கு எடுத்து வரப்படும். அதைத் தொடர்ந்து கல்விப்பணிப்பாளர் திரு முறைக்கொடியை ஏற்றிவைப்பார்

ஓதுவார் வி. ரி. வி. சுப்பிரமணியம் கொடிக்கவி பாடுவார். வட்டாரக்கல்வி அதிகாரி திரு ஆ. வ. தங்கராசா மங்களவிளக்கேற்றி வைப்பார் திருமதி வி. கைலேஸ்வரன் பஞ்சபுராணம் ஓதுவார்.

பவளவிழா குழுச் செயலாளர் திரு. சிவ. மகாலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார். கல்லூரியின் பிரதமகுரு திரு. இ. நவரத்தினக்குருக்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படும்

ஆசியுரைகளை திரு. இ. நவரத்தினக் குருக்கள், கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன். திரு. க. கனகராசா ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

பவளவிழா மலரை வைத்திய கலாநிதி திரு. கே. வேலாயுதபிள்ளை வெளியிட்டு வைப்பார்.

திரு க. சிவராமலிங்கம், திரு ச. விநாயகமூர்த்தி, பண்டிதர் க உமாமகேஸ்வரன், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்துவர். அவற்றைத்தொடர்ந்து கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

பொருட்காட்சி நிகழ்ச்சி 22-ந் திகதி வியாழக்கிழமையும் 27-ந் திகதி வெள்ளிக்கிழமையும் காலை முதல் மாலை வரை நடைபெறும்.

பிரதம கல்வி அதிசாரி திரு க. கந்தசாமியும் விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு. பா. சி. சர்மாவும் பொருட்காட்சிகளை ஆரம்பித்து வைப்பார்கள்.

இந்நிகழ்ச்சியில் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. சு. மனோகரபூபன் வரவேற்புரை நிகழ்த்துவார் திரு. அ. சுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றுவார். [ஐ]

## அரியாலை வேளாங்கண்ணி திருநாள்

[யாழ்ப்பாணம்]

யாழ் அரியாலை கிழக்கு அன்னைவேளாங்கண்ணிமாதா திருவிழாவின் ஆயத்த வழிபாடுகள் நாளை சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை மாலை 4 30 மணிக்கு திருப்பலியும் நற்கருணைப்பவனியும், ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாப்பூசைப் பலியும் திருச்சுரூபப் பவனியும் இடம் பெறும். )ஐ)

## விவசாயக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் இன்று விவசாய வள ஆய்வு செயல்முறைப் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றினை நடாத்துகின்றது. யா/ மகாஜனக் கல்லூரி பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் திரு. சி. சிவமகாராசா தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெறும்.

இக் கருத்தரங்கு ஆரம்பமாகும்முன் களத்தில் பயிர்ச் செய்கை முறை பார்வையிடல் இடம்பெறும்.

யாழ் பிரதி விவசாயப் பணிப்பாளர் திரு. ச. கிருஷ்ணபிள்ளை யாழ் பிரதி கமநல சேவை ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அதிபர் திரு. க நாகராசா யாழ கூட்டுறவு ஆணையாளர் திரு. மு. சுந்தையா ஆகியோர் இக் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர். [பி]

# சமகால நிகழ்வுகளைக் காட்டும் நாவல்

**இம் மாதம் 18 ம் திகதி திருமதி கோகிலா மகேந்திரனின் "துயிலும் ஒருநாள் கலையும்" நாவல் வெளியீட்டு விழா மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. நாவல் பற்றிக் கலாநிதி நா. சுப்பிரமணியம் எழுதிய கருத்துரைத்தொகுப்பு.**

இந்நாவல் அகமும் புறமும் ஆகிய இரு கதைகளின் இணைப்பாகும். ஒன்று கணவனின் தாழ்வுச்சிக்கலாலும் அன்பில்லாத 'செக்ஸ்' ஆலும் பாதிக்கப்பட்டு அச் சிறைவாழ்விலிருந்து விடுதலை பெறத் துடிக்கும் ஒரு மனைவியின் கதை. இன்னொன்று கல்லூரிக்சூழலின் பொய்மைகளுக்கும் பொய் முகங்களுக்குமிடையில் உண்மையான நட்பையும் நல்ல உள்ளங்களையும் காண விழையும் ஒரு ஆசிரியையின் கதை. இவ்விருகதைகளையும் இணைந்து நிற்பது நாவலின் தலைவியாக அமையும் பூரணி என்ற பாத்திரம். விஞ்ஞானக் கல்வி மூலம் 'எதையும் அறிவு பூர்வமாக அணுகும்' நோக்கும் டேல்கார்ணகி முதலிய உளவியலாளர்களின் நூற்பயிற்சி காரணமாகப் பெற்ற உளவியல் சார்ந்த அணுகுமுறையும் பூரணியின் ஆளுமைகள். இவற்றால் அவள் தன்னையும் தன்னைச் சூழவுள்ளவர்களையும் உரியவகையில் விளங்கிக்கொள்ளவும் விமர்சிக்கவும் முற்படுகிறாள். இவ் விளக்கம் விமர்சனம் என்பவற்றின்பேறாகத் தனதுவாழ்க்கைப் பாதையைச் செப்பனிட்டுக் கொள்கிறாள்.

நாவலின் பிரதான கதையம்சமாகிய மனைவியின்கதை' தமிழர் சமுதாயத்திலே திருமணம் என்ற புனிதப்பிணைப்புத் தொடர்பாக நிலவும் முக்கிய குறைபாடொன்றை அடிப்படையாகக்கொண்டது. மண வாழ்க்கை என்ற மாளிகைக்கு ஆண்—பெண் இருவரதும் மனப்பொருத்தமே அத்திவாரமாக அமையவேண்டும். ஆனால் மனப்பொருத்தம் நோக்காது பணம், அந்தஸ்து என்பவற்றை அத்திவாரமாக இட்டு மணவாழ்க்கையைக் கட்டியெழுப்ப முயல்வதே பெருவழக்கு இவ்வாறான இணைப்பின் பின்னரும் கணவன் — மனைவி ஆகிய இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முற்பட்டால் வாழ்க்கை ஒருவாறு தொடரப்படும்; தவறினால் அவ் வாழ்க்கை சிறையாகவும் நரகமாகவும் மாறிவிடும். தமிழ்ப் பண்பாட்டின்படி பெண்மையே இதனாற் பெரும்பாதிப்படைகிறது. இச் சிறையிலிருந்தும் நரகத்தினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ள விரும்பும் பெண்மையின் நியாயமான உணர்வுகளைச் சமூகம் பாரம்பரியமான கற்பு எனப்படும் பண்பாட்டு விழுமியம் மூலம் கட்டுப்படுத்திவிடுகிறது இக் கட்டுப்பாட்டை உதறித் தள்ளிவிட்டுச் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க முற்படும் பெண்மையுணர்வுகளை நியாயப்படுத்துவதே இக்கதையின் தொனிப்பொருளாகும். மனப்பொருத்தமின்றிப் பெற்றோரது விருப்பத்திற்கேற்ப வியாபாரியொருவனுக்கு மனைவியாகிவிட்ட பூரணி கணவனை உரியவகையிற்புரிந்துகொண்டு வாழ முயற்சிக்கிறாள். தனது நியாயபூர்வமான உணர்வுகளை அவன் புரிந்து கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கிறாள். கல்வியின் ஏற்றத்தாழ்வு கணவனுக்கு ஏற்படுத்திய தாழ்வுச் சிக்கலின்முன் பூரணியின் முயற்சிகள் பலனற்றுப்போய் விடுகின்றன. பூரணியின் செயல்கள் யாவற்றிலுமே குற்றங்காணும் கணவன் அவளது ஒழுக்கத்திற்கூடக் களங்கம் காண முற்பட்டபோது அவள் துயில் ஒரு நாள் கலைகிறது; கணவனைப் பிரிந்து தனித்து வாழத்தொடங்குகிறாள்.

பூரணி—இந்திரன் நட்புக்கும் பூரணி கணவனைப் பிரிந்து வாழ மேற்கொண்ட முடிவுக்கும் காரணகாரியத் தொடர்பு காட்ட முடியாத வகையிலே நாவலை ஆசிரியர் நிறைவு செய்துள்ளார். அதாவது அன்பில்லாத கணவரிடமிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் பூரணியின் முனைப்பு ஒரு சுதந்திர வேட்கை மட்டுமே என்பதை தனித்து வாழும் முடிவு புலப்படுத்துகிறது.

சமகால அரசியல் சமூகச்

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவுக்கரசர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அப்பர் சுவாமிகளின் குருபூசை இன்றுகாலை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் வித்துவான் க. சி. குலரத்தினம் அவர்களின் சிறப்புரையும் பண்ணிசைப் புலவர் திரு வே. சிவஞானம் அவர்களின் பண்ணிசைக் கச்சேரியும் கல்லூரி மாணவர்களின் பண்ணிசை, பேச்சுக்களும் இடம்பெற்று, பேச்சுப் போட்டி தேவார மனனப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசில் வழங்கும் நிகழ்ச்சியும் இடம் பெறும்.

இவ் வைபவத்தினை வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலய தர்மகர்த்தா சபையினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

## உரும்பிராய்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்நிலைகள் கதை நிகழ்ச்சிகளுக்கான பகைப்புலங்களாக அமைகின்றன. ஆயுதப்படைகளின் அட்டகாசம்.

இன்றைய விடுதலைப் போராட்டச் சூழலும் நீறுபூத்த நெருப்பாக உள்ள சாதி ஏற்றத் தாழ்வுணர்வின் சாயலும் இந்நாவலிலே புலப்படுகின்றது. அன்பில்லாத கணவனின் அடக்குமுறையிலிருந்து விடுபடத் துடிக்கும் பெண்மையுணர்வுகள் இன்று தனிக்கவனத்தினைப் பெற்றுவரும் 'பெண்நிலைவாத' உணர்வுப் பகைப்புலத்தையும் நினைவுக்கு இட்டுவருகின்றன.

ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றிலே பொருத்தி நோக்கும்போது இந்நாவல் ஒரு புதுவகை முயற்சி என்றே கொள்ளவேண்டியுள்ளது. நாவலின் பிரதான கதையம்சமும் கதை கூறும் முறையும் முன்னைய நாவல்கள் பலவற்றினின்றும் வேறுபட்டிருப்பதை அவதானிக்கமுடிகிறது. கோகிலா அவர்கள் தொடர்ந்து முயன்ருல் ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியத் துறைக்குப் புதிய பரிமாணங்களை அவரால் தரமுடியும் என்ற நம்பிக்கையை இந்நாவல் தருகிறது.

எம்பயர் திரையில்
அர்ஜுன்— அனுராதா
எதிரி

லிடோ Jaffna
10-30, 2-30, 4-30 6-30
VICTORY AT ENTEBBE
[Full of Airport Attack]
[உகண்ட விமானநிலைய நேரடித் தாக்குதல்]

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
விதி
(கலர். புதிய பிரதி)

லிபேட்டி சினிமாவில்
வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்
Arthor Steloff தயாரிப்பில்
Bud Spencer-James Coburn நடித்த
MASSACRE AT FORT HOLMAN
கொலமன் கோட்டை நடந்த பயங்கர படுகொலைகளை சித்தரிக்கும் ஓர் பயங்கரப்படம்.
காட்சி நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன.
10-00, 2-00, 4-15, 6-30

# உறுதி மோசடி வழக்கில் எதிரி சரீரப்பிணையில் விடுதலை

(மாவிட்டபுரம்)

உறுதி மோசடி வழக்கு ஒன்றில் இரு எதிரிகள் தலா 2000 ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் மற்றொருவருக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டது.

யாழ் விசேஷ குற்றத்தடுப்புப் பிரிவு பொலிசாரினால் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி வழக்கில் அளவெட்டியைச் சேர்ந்த முருகேசு நடராசா ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சரவணமுத்து சின்னத்தம்பி, சங்கானையைச் சேர்ந்த சோமசுந்தரம் சிவஞானம் ஆகியோர் எதிரிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவைச் சேர்ந்த நரசிங்கம் ஐயம்பிள்ளை, நரசிங்கம் செல்லையா, மாணிக்சம் பெண் சிவக்கொழுந்து ஆகியோருக்கு தெரியாமல், அவர்களது அனுமதியின்றி உறுதிச் சாதனமொன்றை பொய்யாகவும் மோசடியாகவும் நிறைவேற்றியமை தொடர்பாக இவர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கை விசாரணை செய்வதற்காக விசேஷமாக நீதிபதி திரு. எஸ். வரதராசா அழைக்கப்பட்டு அவர் முன்னிலையில மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட முதலாம், மூன்ரும் எதிரிகளை தலா 2000 ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி 2ம் எதிரிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கட்டளை பிறப்பித்தார். விசாரணை இம்மாதம் 26ந் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்காளி தரப்பில் யாழ் விசேஷ குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிசாருடன் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர் எதிரி தரப்பில் சட்டத்தரணி கே. உலகநாதன் ஆஜரானர்.

## விசர்நாய் தடுப்பு மருந்து ஏற்றும் திட்டம் - 17-05-86

### சனிக்கிழமை

**காலை 8-00 10-00**

01. 'காந்தன்ஸ்' 47, நாவலர் ரோட், நாவாந்துறை
02. இல: 72, 'இராஜேஸ் இல்லம்'' கண்ணபுரம்.
03. இல: 179, சிவன் பண்ணை வீதி, 'சிவாஸ் ஸ்ரோர்ஸ்'.
04. 'உதயதாரகை ச ச. நிலையம்', கோணந்தோட்டம்

**காலை 10-30 — 12-30 பி.ப.**

05. உப மின் நிலையம், கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி.
06. சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம் - (ஆண்) குருநகர்
07. இராசாவின் தோட்டம் வீதி, விழிப்புக் குழுக் காரியாலயம்
08. கலட்டி மெதடிஸ் மிசன் பாடசாலை, இராமநாதன் வீதி

### 18-05-86 ஞாயிற்றுக்கிழமை

**காலை 08-00 — 10-00**

01. இல; 29, மலர்பகள் வீதி, அரியாலை
02. இல: 25, அருளம்பலம் வீதி, சித்திவிநாயகர் கோவில், அரியாலை
03. வஸ்தியன் அச்சகம், சுண்டிக்குளிச் சந்தி,
04. இல: 96, கோவில்வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி.

**காலை 10-00 — 12-00 பி.ப.**

05. தியணைக்கும் சேவை நிலையம், நல்லூர்,
06. சந்தணமாதா கோவில், பண்டியன்தாழ்வு

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
சுகாதாரப்பகுதி,
யாழ்ப்பாணம்.
13-05-86. A-670

## காங்கேசனில் படையினர் பொருள்களுடன் கப்பல்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு வந்துள்ள படையினருக்கான பொருள்களை எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்குப் படையினருக்குரிய பொருள்களுடன் கப்பல் ஒன்று வந்துள்ளது.

இக்கப்பலில்இருந்துபொருள்களை இறக்கி எடுத்துச் செல்வதற்காக படையினரால் பல லொறிகள் கடத்திச் செல்லப்பட்டன. சிமெந்து பெறச் சென்ற லொறிகளே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டன.

இப் பொருள்கள் லொறிகளில் ஏற்றிப் பலாலிக்கு எடுத்து செல்ல நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது

## ஜகார்த்தா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கையை மேற் கொண்டதாகத் தெரிவித்தனராம்.

இதேவேளையில் லெபனனில் அடுத்தடுத்து வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் தாக்கப்படுவதைத் தொடர்ந்து ஆஸ்திரியத் தூதுவர் சடுதியாக அந்நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். இவர் அண்மையில் கடத்தல் முயற்சியிலிருந்து மயிரிழையில் தப்பியவராவ

இங்குள்ள பல தூதரகங்கள் தமது அலுவலகப் பணியாளர்களின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைத்துள்ளது. இங்கு ஆஸ்திரிய, லெபனன் தூதரகங்களே பயங்கரவாதிகளெனப்படுவோரின் முக்கிய தாக்குதல் இலக்குகளாக இருக்கின்றன என்றும் அறிவிக்கப்படுகின்றது. [ஷ]

## காங்கேசன்துறை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் மட்டும் வீதியாலும், வீட்டு வளவுகள் ஊடாகவும் கடற்கரையாலும இவர்கள் வந்தனர்.

பின்னர் அரைமணி நேரத்தின் பின் அதிரடிப்படையைச் சேர்ந்த சுமார் 200பேர் நவீன ரக ஆயுதங்களுடன் நடைபவனியாகக் காங்கேசன்துறை நோக்கி வந்தனர்.

இதையடுத்துப்பகல் 10மணியளவில் கவச வாகனங்கள் சகிதம் சுமார் 200 இராணுவத்தினர் மீண்டும் பலாலியில் இருந்து காங்கேசன் துறை நோக்கி வந்தனர்.

இவ்வாறு கவச வாகனங்களில் சென்றவர்கள் சில பிரசுரங்களை வீசிச் சென்றதாகவும் பிரபாகனை ஒழித்துக்கட்டுவோம்' என்னும் தலைப்பில் அப்பிரசுரம் அமைந்திருந்ததாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்

எல்லோரும் ஒன்று சேர்ந்து பிரபாகரனை ஒழித்துக்கட்ட வேண்டும எனவும். அதற்குச் சகலரும் ஒன்றுபட வேண்டுமெனவும் அப்பிரசுரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாம்.

# சந்நிதி ஆலய நிர்வாகிகள்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலய நிர்வாகிகள் தம்மை நேரில் சந்தித்து உரையாடுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு தம்மிடம் பணித்துள்ளதாக அரசாங்க அதிபர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக ஆலய நிர்வாகிகளுடன் தாம் தொடர்பு கொண்டு விரைவில் ஜனதிபதியைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்சக் கொடுக்கும் முயற்சியில் தாம் ஈடுபட்டு வருவதாகவும், விரைவில் இச் சந்திப்பு நிகழுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொண்டமனாறில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரின் நடவடிக்கைகளால் செல்வச் சந்நிதி கோவிலில் இன்றுடன் 57 நாட்களாகப் பூசை, ஆராதனைகள் நடைபெருதிருப்பது தெரிந்ததே. [மா]

## தற்பாதுகாப்பு---

''தற்சமயம் யாழ். மாவட்டத்தில் அரச படைகள் குவிக்கப்பட்டு வருகின்றன. இதன் நிமித்தம் தரை, கடல், ஆகாயமார்க்கமான தாக்குதல்கள் அரசால் தொடரப்படலாமென அறி

(1ம் பக்கத் தொடர்ச்சி

யக் கிடக்கிறது. எமது மக்களை எமது இறுதி மூச்சு உள்ள வரை நிச்சயம் பாதுகாப்போம். எனவே மக்களும் எம்மோடு இணைந்து தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் உடனடியாக இறங்குமாறு வேண்டிக் கொள்கிரும்'' (ஐ)

## புனர்வாழ்வு நிதி ஆரம்பித்தனர்

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி, தையிட்டி, ஊறணி பகுதிகளுக்கான கிராமிய ஒருங்கிணைப்புச்சபைஅகதிகளுக்கான புனர்வாழ்வு நிதி ஒன்றை ஆரம்பித்துள்ளது

தற்சமய சூழ்நிலையில் அகதிகளாகி வாழவழியின்றித் தவிக்கும் வறிய மக்களுக்கு உதவும் நோக்கமாக இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நன்றி நவிலல்
எனது கொண்டா CD 200 83ஸ்ரீ5116 மோட்டார் சைக்கிள் ஒன்பது மாதங்களாக தேடியும் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. இதை அண்மையில் எனக்குமீட்டுத்தந்த புனித இயக்கத்துக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்
ஜெ. ராஜக்கோன்,
மருதடி வீதி — யாழ்ப்பாணம்.
(A 675)

நியூ விக்ரேஸ்
புதிய வீடியோ பட வெளியீடுகள்
1. ராஜராஜசோழன் (PYRAMID ORIGINAL)
2. இரத்தக்கண்ணீர் (PYRAMID ORIGINAL)
3. அவன்தான் மனிதன் (PYRAMID ORIGINAL)
நியூவிக்ரேஸ்
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
தொலைபேசி: 23532.
A 499

trust travel service
11 A, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்நகர். T. P. 24111
தலைமையகம்: 65. சதாம் வீதி, கோட்டை.
உங்கள் விமான டிக்கட்டுகளை கவர்ச்சியான விலையில் பதிவு செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
ஏரோபுளட், C. P. எயர், பாகிஸ்தான் எயர்லைன்ஸ்
ஆகிய விமான கம்பனியின் டிக்கட்டுகள் மூலம் பிரயாணம் செய்பவர்களுக்கு கவர்ச்சியான விலைக்குறைப்பு செய்ய முன்வந்துள்ளனர்.
கொழும்பு / ஒஸ்லோ
கொழும்பு / லண்டன்
கொழும்பு / சிங்கப்பூர் (SPECIAL FARES)
கொழும்பு / மட்ருஸ்
கொழும்பு / மொன்றியல்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
ரஸ்ற் ரவல் சேர்விஸ்.
(A 497)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திருமலே அகதிகளுக்கு அரச உதவி தொடரும்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவுப் பகுதியில் திருமலை மாவட்டத்திலிருந்து அகதிகளாக வந்து தஞ்சமடைந்தவர்களுக்கு மே மாதம்வரை அரசாங்க உதவிகள் வழங்கப்படுமென முல்லைத்தீவு மாவட்டப் பிரஜைகள் குழுவினரிடம் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் தெரிவித்துள்ளார்.

திருமலை மாவட்ட அகதிகளுக்கான உதவிகளை அரச மேலிடம் நிறுத்துவதற்கு உத்தரவிட்டதையடுத்துப் பிரஜைகள் குழு அரசாங்க அதிபரைச் சந்தித்து அகதிகளுக்கு அரச உதவிகளைத் தொடர்ந்து வழங்குமாறுகேட்டுக்கொண்ட தற்கிணங்க அரசாங்க அதிபர் இந்நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகப் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு கி. தியாகராசா தெரிவித்தார்.

## சிறப்புரையும் பிரார்த்தனையும்

(யாழ்ப்பாணம்)

சுவாமி சித்ருபானந்தாவின் சிறப்புரை நிகழ்ச்சி இன்று 16ம் திகதி வெள்ளியன்று காலை திருநெல்வேலி ராமகிருஷ்ணாலயத்தினரின் ஆதரவில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியிலும், முற்பகல் சத்சங்கமும் பிரார்த்தனையும் நவாலியில் டாக்டர் சிவாஜியின் இல்லத்திலும் நடைபெற உள்ளன.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் காலை நிகழ்ச்சிகளின்போது ராமகிருஷ்ணாலயத்தினரால் நடாத்தப் பெற்ற சமயப் பாடப்பரீட்சையில் திறமைச் சித்தி பெற்ற மாணவிகளுக்கான பரிசில்களும் வழங்கப்படும். (பி)

## செஞ்சிலுவைச் சங்கத்தின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக்கிளையின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை யாழ் வை. எம். சி. ஏ. கட்டடத்தில் நடைபெறவிருக்கின்றது.

1983ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தையடுத்து வடபகுதியில் தமிழ் அகதிகள் மத்தியில் யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கம் பெரும் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் வன்செயல்களாலும் இயற்கை அழிவுகளாலும் பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு இச்சங்கம் ஆற்றிவரும் சேவைகள் அனந்தம் இச்சேவைக்கென இச் சங்கம் வெளிநாட்டு உதவிகளையும் பெருமளவு பெற்று செயற்பட முடியும் என்பதால இங்கு உறுதியும் செயலாற்றலுமுள்ள ஒரு கிளை இருப்பது அவசியம் எனக்கருதப்படுகின்றது. இக்கிளை திறமாக செயற்பட்டால் மாத்திரமே வெளியிடங்களிலிருந்து உதவிகளைச் சீராகப் பெறமுடியும் என்பது நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் வலியுறுத்தப்படுமென்று தெரிகின்றது.

# இந்த ஆஸ்பத்திரிகளுக்கு நோயாளரை அனுப்ப தமிழ்மக்கள் தயக்கம்

[மட்டக்களப்பு]

திருகோணமலை, மட்டக்களப்பு ஆஸ்பத்திரிகளிலிருந்து அநுராதபுரம், அம்பாறைஆஸ்பத்திரிகளுக்கு ஆபத்தான கட்டத்திலுள்ள தமிழ் நோயாளர்களைச் சிகிச்சைக்காகஅனுப்புவதைத் தமிழ் மக்கள் மறுத்துவருகின்றனர்.

ஆயுதப் படையினரால் தாக்கப்பட்டு அநுராதபுரம், அம்பாறை ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் தமிழ் நோயாளர் கதி அதோகதியாக இருப்பது மட்டுமல்லாமல் அவர்களின் சடலத்தைக்கூட உறவினர் காணமுடியாத ஒருபரிதாபகரமான நிலை ஏற்படுகிறதாம்.

மட்டக்களப்பு பழுகாமத்தைச் சேர்ந்த மதபோதகர் ஒருவருக்கு இக்கதி நேர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பழுகாமத்தைச் சேர்ந்த திரு. தி. மாணிக்கம்பிள்ளை (28 வயது) மெதடிஸ்த மத போதகராக நுவரெலியாவில் பயிற்சிபெற்றுவந்தவர். கடந்த மாதம் 30-ம் திகதி தமது சொந்த ஊரான பழுகாமத்துக்கு வந்திருந்தார். அச்சமயம் ஆயுதப் படையினர் இவரைக் கைது செய்து வெல்லாவெளி முகாமுக்குக் கொண்டு சென்றனர். இவரது உறவினர்கள் முகாமுக்குச் சென்று அவரை விடுதலை செய்யும்படி வேண்டுகோள் விடுத்தனர். விசாரணையின் பின்னர் அவர் விடுவிக்கப்படுவார் என்று முகாம் அதிகாரிகள் பதில் அளித்தனர்.

திடீரென ஒரு நாள் திரு. மாணிக்கம்பிள்ளை இரத்த வாந்தி எடுத்ததைத் தொடர்ந்து கல்முனை ஆஸ்பத்திரியிலும் பின்னர் அம்பாறை ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டார். கடந்த 9 ம் திகதி அவர் அங்கு மரணமானதாகத் தெரியவந்ததும் உறவினர்கள் அவரின் சடலத்தைப்பெறச்சென்றனர். ஆனால் ஆஸ்பத்திரியில் சடலம் காணப்படவில்லை.

சடலத்தைக்கூடப் பெறமுடியவில்லையே என்ற ஏமாற்றத்துடன் திரும்பிய உறவினர்கள் சவஅடக்கம் இல்லாமலே துக்கம் கொண்டாடினர்.

## ஓய்வுபெற்ற ஆசிரியர்

மதிப்பிற்குரிய ஆசிரியர் இரத்தினம் அவர்கள் தனது ஓய்வுபெறும் காலம்வரையும் இந்துக்கல்லூரி மாணவிகளின் எதிர்கால சுபிட்சத்திற்கும் கல்லூரியின் வளர்ச்சிக்கும் தனது ஆற்றல்அனைத்தையும் பயன்படுத்தி உழைத்தார்.

யாழ் திருக்குடும்ப கன்னியர்மடத்தில் தனது கல்வியைக்கற்று மிக இளம் வயதில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தனது தனது விஞ்ஞானப்பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட இவர் தனது சிந்திக்கும் ஆற்றலினால் பௌதிகத்துறையில் திறமைபெற்று விளங்கி 1956ம் ஆண்டு யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பௌதிக ஆசிரியராககடமை ஏற்றார். ஆசிரியர் அவர்கள் காலடி எடுத்துவைத்த அன்றிலிருந்து கல்லூரியானது மிகத் துரிதமாக வளர்ச்சி அடைந்தது. தற்போது இந்து மகளிர் கல்லூரி யாழ் மாவட்டத்தில் மிகச்சிறந்த ஒருஇடத்தை வகிப்பதற்கு காரணகர்த்தாக்களில் ஆசிரியர் செல்வி இரத்தினம் அவர்களும் ஒருவர் என்றால் மிகையாகாது.

பௌதிகத்தை மாணவிகளுக்கு மிக இலகுவான முறையில் மாணவிகள் இலகுவில் கிரகிக்கதக்க முறையிலும் புகட்டினார் இதன் விளைவாக பல்கலைக் கழகத்திற்குஅனுமதி பெறும் மாணவிகளின் தொகைபெருகியது.

இவர் ஆங்கில மொழியில் ஆற்றல் உடையவராகவும் சிறந்த பேச்சுவன்மை உடையவராகவும் இருந்தார் இதனால் மாணவிகளை ஆங்கிலப் பேச்சுப் போட்டிகள் விஞ்ஞான அறிவுப் போட்டிகள் என்பனவற்றில் ஈடுபடுத்தி அவற்றில மாணவிகள் திறமையாக செயற்பட்டு வெற்றியடைய அயராது உழைத்தார் கல்லூரியில் நடைபெறும் எந்த விசேட நிகழ்ச்சிகளிலும் ஆசிரியர் அவர்கள் முன்னின்று மாணவிகளுக்கு ஒத்துழைப்பார் இத்தகைய அம்சங்களினால் இவர் மாணவிகளின் இதயத்தில் அழியாத இடத்தை பிடித்துக்கொண்டார் அத்துடன் அதிபரின் ஏனைய ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் நன்மதிப்பையும் பெற்றுக்கொண்டார்.

அவரிடம் கல்விபெறும்வாய்ப்பை பெற்றஅதிர்ஷ்டத்தினால் மாணவிகளில் பலர் வைத்தியர்களாகவும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும், புலமைப்பரிசில் பெற்றுவேற்று நாடுகளில் மேற்படிப்பு படித்துக்கொண்டும் இருக்கின்றார்கள். இவர் இறுதி 3 வருடங்களாக கல்லூரியின் உப அதிபராகவும் கடமை ஆற்றியுள்ளார். தனது 30 வருடசேவையின் பின் கடந்தமாதம் ஓய்வு பெற்ற அவரது சுபவாழ்வுக்கும், வெற்றிக்கும் ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

செல்வி ஜெயகௌரி நடராசா.

Lipton

லிப்டன் லாவோஜி பிரியர்களுக்கோர் நற்செய்தி

புதிய குறைந்த விலையில், அதி நிறைந்த சுவையுடன் "லிப்டன்" வாசகம் பொறிக்கப்பட்ட அலுமினியம் சுற்றுக்தாளில் அடைக்கப்பட்டு புதிய பொலிவுடன் "லாவோஜி" தேயிலைப் பக்கட்கள் இப்பொழுது எங்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

போலி லிப்டன் லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதால் லாவோஜி தேயிலை வாங்கும்போது, மேற்கூறப்பட்ட முக்கிய அம்சங்களை அவதானித்து அசல் லாவோஜியை உங்கள் மொத்த, சில்லறை, வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.




புதிய விலை: ரூபா 3/60 (50 கிறும்)

லிப்டன் சிலோன் லிமிட்டெட்,
த. பெ. எண் 86,
கொழும்பு.

லிப்டன் லவோஜி
அதி சிறந்த தேயிலைத் தூள்

A493

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம்- வைகாசி
திகதி- 2[1986-5-16]
கிழமை- வெள்ளி
திதி- ஸப்தமி பி.ப. வரை
நட்சத்திரம்- ஆயிலியம் மு.இ. வரை

மேடம்: தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவும் உண்டு. தெய்வநம்பிக்கையுடன் பெரியோர் உதவியும் உண்டு.

இடபம்: தொழிற்துறையால் நன்மையுமுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். திடீர் பிரயாணம் குறித்து சிந்தனை உருவாகும்.

மிதுனம்: வணிகத்துறையில் புதிய வாய்ப்பு ஏற்படும் கைத்தொழில் விருத்தியும் உண்டு. பணவிவகாரங்களில் நல்லநிலை தென்படும்

கடகம்: அதிகசிந்தனை மூலம் சிறியதலையிடிக்குமிடமேற்படும். தானியவிருத்தியில் நஷ்டத்திற்குமிடமுண்டு. அமைதிவிரும்பத்தக்கது

சிங்கம்: தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம். வெளியிடத்துத் தொடர்புகளில் மந்தநிலைதென்படும் உடல்நலத்திலும் சுகாதாரம் வேண்டும்.

கன்னி: பிரச்னைகள் பல இன்று நல்ல முடிவைத்தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். திடீர்வரவும் உண்டு

துலாம்: வாகனச் சாரதிகள் நிதானத்துடன் செயலாற்றவும். எதிர்பார்த்தவிடயம் தடைப்படும். மனதில் அமைதி குன்றும்.

விருச்சிகம்: உறவினர்கள்உற்சாகமான வரவேற்பைக கொடுப்பார்கள். பந்தபாசம்

(8ம் பக்கம் பார்க்க)


## பிரயாண ஒழுங்குகள்

கனடா ஜேர்மனி
பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர்

18–ந் திகதி உங்களை குறைந்த செலவில் அழைத்துச்செல்வார்.

உடனடியாக பாஸ்போட்
உடன் தொடர்பு கொள்ளவும்.

- சவூதியில் கிளீனர் ஆண், பெண் இருபாலாருக்கும் வருமான ஒழுங்கும்
- குவைத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் வருமான ஒழுங்கும்
- மாலைதீவிலும் வருமான ஒழுங்கு உடனடியாக செய்து தரப்படும்.

பாஸ்போட், BOND, ரிக்கற் முதலியனவும் துரித கெதியில் செய்து தரப்படும்.

GROUP ATLANTIC
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக)

(A 491)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
தில்லையம்பலம்
நடராசா
[மாங்குளம் - கொலனி]

தோற்றம்: 06-09-1933
மறைவு: 02-04-1986

எங்கள் குடும்பத்தின்
இணையற்ற ஜோதியே
அன்பினால்அனைவரையும்
ஆதரித்த பெருந்தகையே
கண்மலையாய் உரங்
கொண்டு
கருமமாற்றும் வலலவரே
துன்பமென்று வருவோர்-
தம்
துயர்துடைக்கும் தூயவரே
உங்கள் நினைவாலே
உருகுகிறோம் நாள்தோறும்
என்றும் எம்இதயத்துள்
இருந்திடுவீர் இருந்திடுவீர்.

16-5-86 வெள்ளிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி வீட்டுக் கிருத்தியத்தில் கலந்து கொள்ளுமாறு நண்பர்கள் சுற்றத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாயார், மனைவி,
பிள்ளைகள், மருமகன்.

தகவல்:
ந பூலோகராசா
இல: 10, கொலனி,
மாங்குளம். C 2332

## காவலூர் இலக்கிய வட்டம்

(யாழ்ப்பாணம்)

காவலூர் இலக்கிய வட்டத்தின்6 வது வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த வாரம் கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலயத்தில் திரு.ஆ. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பல புதிய விடயங்கள் ஆராய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனா:

தலைவர்: ஆ. சபாரத்தினம், துணைத்தலைவர்: கே. ஏ. ஜோர்ஜ், செயலாளர்; க. தவபாலன், துணைச்செயலாளர்: ஜே. நந்தகுமார், பொருளாளர்: இ. ஞானசோதியன், துணைப்பொருளாளர்: சி. தயாபரன்.

நிர்வாகக்குழு உறுப்பினர்கள்ச ஜெயராசா, என். லோகேந்திரலங்கம், ச. ஞ்சலன்ஸ், கே. ஆர். சிவலிங்கம் சா. தியாகலிங்கம்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு. கு. ம.
அரியரெத்தினம்
[இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்]


தோற்றம்: 12-09-1925
மறைவு: 26-05-1985
திதி: 16-05-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் விளங்கி எம்மைக் கண்ணை இமை காப்பது போல் காத்த எங்கள் அன்புத் தெய்வமே, இன்று உங்கள் ஆத்ம சாந்திக்காகப்பிராத்திக்கும்,

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பண்டாரிகுளம்,
வவுனியா C 2067

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



திரு. முருகேசு
குமரேசு
[புங்குடுதீவு மேற்கு]

அன்னையின் மடியில்:
23-03-1936

ஆண்டவன் அடியில்:
16-04-1986

எங்கள் குடும்பத்தலைவனாக இருந்து இறைபதம் எய்திய முருகேசு குமரேசு அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டோர்க்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்க்கும், பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்க்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதோடு 16-05-86 இல், 228/1, நாவலர் வீதியில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.
[C 2342]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



இறையருள் கூடிய இணையில்லாப் பெருமாட்டி

திருமதி
இரத்தினேஸ்வரி
சிவம்

தோற்றம்: 25-04-1924
மறைவு: 16-04-1986
திதி: 16-05-1986

குடும்பத்தின் ஒளிவிளக்காய் பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து நொடிப் பொழுதில் எம்மை விட்டுப் பிரிந்தாலும். தங்களின் அன்பு முகம் எம்மை விட்டகலாது.

எங்கள் இதயங்களைப் பிழிந்து எடுத்துக் கொண்டிருக்கும் அன்புத் தெய்வமே! அம்மா! அயராது சேவை புரிந்து எம்மை எல்லாம் உயர வைத்த உத்தமியே! இன்னும் சிலகாலம் எம்நிழலல் இவ்வுலகை நுகராது கடிது இறைவனடியை நாடியது ஏனோ?

16-4-86-ல் சிவபதமடைந்த எங்கள் குலதெய்வம் திருமதி இரத்தினேஸ்வரி சிவம் அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் 16 5-86 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் ஆத்ம சாந்திக்காக உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

தங்கள் பிரிவுத்துயரால் வாடும்:

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சி. இராஜமனோகரன்,
அரசநில அளவையாளர்,
சிவசக்தி கோவிலடி,
அச்சுவேலி தெற்கு.
அச்சுவேலி. C 2350

## LANKA CEMENT LIMITED
Kankesanthurai.

# ஏல விற்பனை

பாவிக்கப்பட்ட துண்டுக்கம்பிகள், முறுக்குக் கம்பிகள், 'ஆங்கிள் அயன்கள்' (Angle Iron) 'H' வடிவ உருக்குத் தீராந்திகள், ஆயுதங்கள் என்பன 1986-05-18, 1986-06-01 ஆகிய இரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9-00 மணி முதல் லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏலவிற்பனையில் விடப்படவுள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 1986-05-17, 1986-05-31 ஆகிய இரு சனிக்கிழமைகளிலும் காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையின் 3-ம் கூற்று முடிவடைந்தவுடன் முழுத்தொகையின் 1/3 பகுதிப்பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்பட வேண்டும்.

பொருட்களைப் பகுதிபகுதியாகக் "கொள்வனவு செய்வோர்" ஏல விற்பனைத் திகதிகளான 1986-05-18, 1986-06-01 ஆகிய தினங்களிலிருந்து இரண்டு (02) நாட்களுக்குள்ளும் முழுக்கூறுகளும் ஒன்றாகக் கொள்வனவு செய்வோர் மேற்குறிப்பிட்ட தினங்களிலிருந்து ஐந்து (05) நாட்களுக்குள்ளும் விற்கப்பட்ட பொருட்களை அகற்றவேண்டும்.

பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

1986-05-13

(A-498)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 16 5-86

# மாட்டிறைச்சிக் கடைகளை அகற்றக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''பசு வதைக்குப் பயந்து பரதேசம் செ. ற ஞானப்பிரகாச முனிவர் அவதரித்த திருநெல்வேலியில் மாட்டிறைச்சிக் கடைகள் திறக்கப்படுவது குறித்து ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் தெரிவிப்பதுடன் இக்கிராமத்தில் வாழும் சைவ மக்களைப் புண்படுத்தும் இப்பாவச் செயலைத் தாமாகவே உணர்ந்து இக்கடைகளை உடனடியாக மூடிவிடுமாறு சம்பந்தப்பட்டவர்களை இச்சபை கேட்டுக்கொள்கிறது.''

இவ்வாறு திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்த சபையின் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபைத்தலைவர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தற்போதைய சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலும் சட்டவிரோத மாட்டிறைசசிக் கடைகள் திறக்கப்பட்டிருப்பது குறித்து கவலையைத் தெரிவிப்பதுடன் ஐ வசமயத்துக்கு மாறுன பசுக்கொலையை உடனடியாக நிறுத்தி இக்கடைகளை மூடுமாறு சம்பந்தப்பட்டவர்களை இச்சபை கேட்டுக்கொள்ளுகிறது என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சைவப்பெரியார் திரு. க சி. குலரத்தினம் எழுதிய முனிவர் பெருமானின் வரலாற்று நூலை அச்சிட்டு வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது

மூத்த தமிழ் அறிஞரான கலநிதி பண்டிதமணி மறைவுக்கு ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

(ஐ)

## அராலி வடக்கு குடிநீர் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு

[சித்தன்கேணி]

அராலி வடக்கு குடிநீர் திட்டத்திற்கு சுமார் 28 000ரூபா பன் ழகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு மேலதிக மோட்டார் இணைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

## இந்திய வானொலியில் தேவாரப் பண் இசை

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தாரின் வேண்டுகோளையேற்று அகில இந்திய வானொலி சேவையின் சென்னை வானொலி நிலையம் மீண்டும் தேவாரப் பண்ணிசைப் பயிற்சியை ஒலிபரப்புச் செய்கின்றது.

இவ்வொலிபரப்பு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இரவு 8 மணிமுதல் 8-30 மணிவரை சென்னை அலைவரிசை ஒன்றில் ஒலிபரப்பாகும்.

கடந்த வருடம் இலங்கைத் திருமுறை மன்றத்தாரின் வேண்டுகோளுக்கமைய சென்னை வானொலி நிலையம் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பினை ஒலிபரப்பி வந்தது குறிப்பிடத்தக்கது. [ஐ]

## வேலணை வட்டார அதிபர்கள் இன்று கூடுகின்றனர்

[வேலணை]

வேலணைக் கல்வி வட்டார பாடசாலை அதிபர்களின் விசேஷ கூட்டமொன்று இன்று வெள்ளிக்கிழமை காலை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

மாநிலக்கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இக் கூட்டத்தில் தீவுப்பகுதி ஆசிரியர் பற்றாக்குறை உட்படப் பல விஷயங்கள் பற்றி ஆராயப்படும்.

## கரை தட்டிய கப்பலை இன்டர்போல் சோதிக்கும்

[கொழும்பு]

தென்னிலங்கைக் கடலோரப்பகுதியில் தரைதட்டியுள்ள கப்பலின் மர்மம் பற்றி அறிந்துகொள்வதற்காக சர்வதேச பொலிஸ் நிறுவனமான இன்டர்போலின் உதவியை இங்கை அதிகாரிகள் கோரியுள்ளார்கள்

'டஹ்லவன்' என்ற இக்கப்பல் சிங்கப்பூரிலிருந்து சென்னைக்கு கழிவுக் கடதாசியைக் கொண்டுசென்றதாகக் கூறப்படுகிறது. எனினும் முன்பு ஒருமுறை இவ்வாறு சிங்கப்பூரிலிருந்து சென்னைக்கு கழிவுக் கடதாசியை ஏற்றிச்செல்வதாகக் கூறப்பட்ட ஒரு கப்பலை இலங்கை அதிகாரிகள் சோதனை நடத்தியதின் மூலம் அதில் யுத்த ஆயுதங்கள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அந்த ஆயுதங்கள் இலங்கைத் தீவிரவாதிகளுக்கே கொண்டு செல்லப்பட்டதாகவும் இலங்கை அரசுதரப்பில் கூறப்பட்டது. அதனால் தற்பொழுது தரைதட்டியுள்ள இந்தக்கப்பலையும் சோதனையிட சர்வதேச பொலிஸ் நிறுவனத்தின் (இன்டர்போல்) உதவியை நாடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ரா]

## நாவற்குழியில் நேற்றும்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து நேற்றும இராணுவத்தினர் வெளியேவந்தனர் என்றும் தொடர்ந்துதுப்பாக்கி வெடிகள் கேட்டதாகவும் இதனையடுத்து இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பிவிட்டனர் என்றும் தெரியவருகிறது

(ஐ)

## படையினர் சுட்டனர் இளைஞர்கள் தப்பினர்

### விவசாயி கைது

(வவனியா)

கல்மடுப் பகுதியை நோக்கி வானொன்றிலும், லொறியொன்றிலும் சென்ற சீருடையினர், ஈச்சம்குளம் என்னும் இடத்தில் வைத்து முருகப்பன் சண்முகராசா என்பவரைக் கைது செய்தனர். இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றப் நிலவியது.

அதனைத்தொடர்ந்து இரணை இலுப்பைக்குளம் நோக்கிச் சென்ற சீருடையினர் தம்மை எதிர்கொண்டு உழவு இயந்திரம் ஒன்றில் வந்துகொண்டிருந்த இளைஞர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவர்கள் அந்த இடத்திலேயே உழவு இயந்திரத்தைக் கைவிட்டுவிட்டு 'கிறனேட்'டை வெடித்தவண்ணம் தப்பி ஓடிவிட்டனராம்.

அதேவேளை ஈச்சம்குளம் என்னும் இடத்தில் வைத்துப் படையினரால் கைதுசெய்யப்பட்ட முருகப்பன் சண்முகராசா ஒரு விவசாயி என்றும் வயல்வேலையை முடித்துக் கொண்டு வீடுதிரும்பிய சமயமே கைதானுர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [பி]

## வலிமேற்கு உ. அ. பிரிவில் வறுமை நிவாரண உணவுமுத்திரை பெறுவோர்

(சித்தன்கேணி)

வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவில வறுமை நிவாரண உணவு முத்திரைகளைப் பெறத்தகுதியானவர்களுடைய பெயர்ப் பட்டியல்கள் வெளியாகியுள்ளது.

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பத்து கிராமசேவை அலுவலர் பிரிவி எட்டுக் கிராமசேவை அலுவலர் பிரிவு பெயர்ப்பட்டியல்கள் வெளியாகியுள்ள எட்டுக் கிராமசேவை அலுவலர் பிரிவிலிருந்தும் சுமார் 6 400 குடும்பங்கள் வறுமை நிவாரண உணவுமுத்திரைகளைப் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

சங்கானை மேற்கு கிராம சேவை அலுவலர் பிரிவில் இருந்து சுமார் 844 குடும்பங்களும், தொல்புரம் கி. சே. அ. பிரிவில் இருந்து சுமார் 1000 குடும்பங்களும், சுளிபுரம் கிழக்கு கி. சே. அ. பிரிவில் இருந்து சுமார் 750 குடும்பங்ளும், மூளாய் கி சே. அ. பிரிவில் இருந்து சுமார் 577 குடும்பங்களும், அராலி தெற்கு, கிழக்கு கி. சே. அ. பிரிவில் இநந்து சுமார் 855 குடும்பங்களும், வட்டுமேற்கு கி சே அ பிரிவில் இருந்து சுமார் 830 குடும்பங்களும், அராலி வடக்குமேற்கு கிராம சேவை அலுவலர்பிரிவில் இருந்துசுமார் 685 குடும்பங்களும், சுளிபுரம் மேற்கு கிராமசேவை அலுவலர் பிரிவில் இருந்து சுமார் 833 குடும்பங்களும் வறுமை நிவாரண உணவு முத்திரைகளைப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடைய பெயர் பட்டியல்கள் அவ்வவ் பகுதி கிராமசேவை லுவலர்களுடைய காரியாலயங்களிலும் . நோப. கூ. ச கிளைகளிலும் மக்களின்பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இப்பட்டியல்களில் இடம் பெறவேண்டியவைகள் அல்லது நீக்கவேண்டியவைகள் பற்றிய முறைப்பாடுகளை எழுத்துமூலம் இம்மாதம் 23ம திகதிக்கு முன்பு சமர்ப்பிக்குமாறு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அறிவித்துள்ளார்.

கடந்தபல வருடங்களாக உணவு முத்திரைகளை பெறத் தகுதி இருந்தும் உணவு முத்திரைகள் கிடைக்காத பலருக்கு இம்முறை உணவு முத்திரைகள் வழங்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த பலவருடங்களாக இந்த எட்டு கிராம சேவை அலுவலர் பிரிவிலும் உணவு முத்திரைகளை பெறததகுதியிருந்தும் கிடைக்காத சுமார் 5 300 எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உணவுமுத்திரைகள் வழங்க இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அநேகமாக வறுமை நிவாரணத்திட்டத்தின் கீழ் ஒருகுடும்பத்துக்கு ஆகக்கூடுதலாக நான்கு உணவுமுத்திரைகளே வழங்கப்பட இருக்கின்றன.

## அநாதைவிடுதியில் ஒப்படைக்கப்பட்ட சிறுமி

(சுழிபுரம்)

தொல்புரத்தைச் சேர்ந்த பன்னிரண்டு வயதுச் சிறுமி ஒருவர் இயக்கப் பிரமுகர் ஒருவரால் தெல்லிப்பழை துர்க்கையம்மன் அநாதை விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சிறுமியைத் தமது வீட்டில் அமர்த்தியிருந்தவரின் துன்புறுத்தலால் சிறுமி அவதியுற்றதைக் கண்ட அயலவர்கள் இயக்கப் பிரமுகர்களிடம் சிறுமியை ஒப்படைத்தனர் சம்பந்தப்பட்ட எஜமானிடம் ஒரு தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்ட இயக்கப் பிரமுகர் துர்க்கை அம்மன் அநாதை விடுதித் தலைவியிடம் ஒப்படைத்தார். சிறுமியின் பெயரில் சேமிப்புப் புத்தகத்தில் பணம் போடப்பட்டுள்ளது. சிறுமி தற்போது அநாதைஇல்லத்தில் உள்ளார்

## கிழக்குக் கரையில் மர்மக்கப்பல்?

[மட்டக்களப்பு]

கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதியில் மர்மக் கப்பல் நடமாடியதா?

நேற்றுப் பிற்பகல் கல்லடிக் கரையை நோக்கி, ஹெலிகாப்டர் ஒன்று பலமணி நேரமாக அந்த மர்மக் கப்பலைத் தேடிக் கொண்டிருந்ததாம். ஆனல் அது கண்டு பிடிக்கப்படாததால் ஏமாற்றத்துடன் ஹெலிகொப்டர் மீண்டும் இருப்பிடத்தைச் சேர்ந்துவிட்டதாம்.

[மா]

## இன்று

(புலோலி)

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வெளிமடை உற்சவ [illegible] இன்று 16ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

# 10 சிலிண்டர்கள் மீண்டும் கிடைத்தன

## தேடுதல்வேட்டையில் பலர் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்ப ஆஸ்பத்திரியிலிருந்து 41 ஒட்சிஸன் சிலிண்டர்களைக் கொள்ளையடித்துச் சென்ற இனந்தெரியாத வாலிபர் கோஷ்டி ஆஸ்பத்திரி நோயாளர் நலன்கருதி நேற்று முன்தினமிரவு 10 ஒட்சிஸன சிலிண்டர்களை மீண்டும் ஆஸ்பத்திரி வளவுக்குள் போட்டுவிட்டுத் தலைமறைவாகிவிட்டதாம்

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுக் காலை திடீரென ஆஸ்பத்திரி வளவைச் சுற்றிவளைத்த அதிரடிப் படையினர் 24 மணிநேரம் அவ்விடத்தை நெருங்கக்கூடாதென்று உத்தரவிட்டனர். சிலிண்டர்களில் குண்டுகள் இருக்கலாமென்ற சந்தேகமே இதற்குக் காரணமெனத் தெரிய வருகிறது.

நேற்றுப் பிற்பகல் இந்த சிலிண்டர்களை ஆஸ்பத்திரி நிர்வாகம் பொறுப்பேற்றுக் கொண்டது.

மேலும் ஆஸ்பத்திரிச் சுற்று வட்டாரத்திலுள்ள கல்லடித் தெரு, மத்தாயஸ்வீத ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்து தேடுதல் நடாத்தி ஆயுதப்படையினர் 15 இளைஞர்களைக் கைது செய்தனர் கல்லடித்தெருவில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த மற்றும் 6 பேரும் கைது செய்யப்பட்டனர். (மா)

## பதற்றத்தில் காரைநகர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஊரி வாழ் பொது மக்கள் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளனர்.

''மேலும் மக்களாகிய நாம் ஒன்றுக் கைகோர்த்து எமது சுதந்திரத்தை வென்றெடுக்க வேண்டிய இக்காலகட்டத்தில் இப்படிப்பட்ட அநாவடித்தனங்களில் அவர்கள் ஈடுபடுவதையிட்டு நாம்வேதனைப்படுவதோடு இச் செயலை முற்ருக வெறுக்கின்ருேம் ஆகவே இப்பிரச்னையை மனிதநேயமுள்ள மக்களும், பொதுஸ்தாபனங்களும் முன்னின்று தீர்த்து வைப்பதை நாம் விரும்புகின்ருேம்.

''உரிமைக்காகப் போரடும் வேளையில் குடி நீருக்காகப் போராட்டமா?'' ''எம்இனத்திலேயே இத்தனை பாகுபாடா?'' என்று பிரசுரத்தில் தெரிவிக்கப்படடுள்ளது.

## இரகசியப்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளை மனேஜரான ஜேக்கப் என்பவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை இவர்கள் விடுவிக்கபபடவில்லை. (மா)

## இன்றைய பலன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

உங்களைப் பரவசப்படுத்தும். திடீர் பயணமும் உண்டு

தனுசு: புத்திர வழியால் புகழுண்டு. குடும்பத்தில்பிணைப்புக்கள் பலப்படும். நண்பர்களாலும் நன்மையுண்டு.

மகரம்: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். சிலருக்கு விரக்திமனப்பான்மை தென்படலாம். இன்று பொறுமையே நன்று.

கும்பம்: அன்பின் அணைப்பு உங்களைப்பரவசத்தில் ஆழ்த்தும். களஸ்திரவழியால் கனிவான சம்பவங்கள் இடம் பெறும். மகிழ்ச்சிகரமான தினம

மீனம்: சிந்தையில் குழப்ப நிலை தோன்றும. மனைவியின் உடல் நிலை கவலையைத் தரலாம். இன்று தெய்வ வழிபாடு நன்று

திருமலை
வே. ரவீந்திரன்

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு மே மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org